DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60/2018**

**(CNR.No: TNTH06-000072-2018)**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகராஜ் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW1** | |

---

நாள் :04.10.2023

**குறுக்கு விசாரணை**

1) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரங்கள் முழுவதையும் நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். தோராய வரைபடத்தில் உள்ளபடி காயத்ரி பள்ளிக்கூடத்திற்கு கிழக்கு பக்கமும், வாதி இடத்திற்கு வடக்கு பக்கமும் எனக்கு பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றால்சரிதான். வாதியின் காலியிடத்திற்கு மேற்குப்பக்கம் 1ம் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் காலியிடத்திற்கு கிழக்குப்பக்கம் 3ம்பிரதிவாதி முருகன் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தபோது எனது காலியிடமும் 1, 3ம் பிரதிவாதியின் வீடுகளும் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே 1ம் பிரதிவாதி, வாதி மீதும் அவரது மகன் மீதும் அசல் வழக்கு எண்.184/2017 வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) வாதிகளின் சொத்தை 1,3 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டதாக அவர்களுக்குள் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். வாதியின் பிராது சொத்தை சர்வேயர் மூலம் அளப்பதற்கு எனக்கு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அளவீடு செய்து பார்த்ததில் எனது இடம்

என்னிடமும், வாதியின் இடம் வாதியிடம் இருந்தது. அவ்வாறு அளவீடு செய்தபோது 1,3 பிரதிவாதிகள் வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள விபரம் தெரியவந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1.3 பிரதிவாதிகள் வாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள விபரம் எனக்கு அப்போதே தெரியவந்தது என்றும் வழக்கிற்காக தெரியாது என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய காலியிடத்தின் சர்வே எண். என்ன என்றால் சர்வே எண். 321 ஆகும். வாதியின் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 320 ஆகும். நான் எனது நிலத்தின் சர்வே எண்ணையும், வாதியின் நிலத்தின் சர்வே எண்ணையும் மாற்றிக்கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது நிலத்தின் சர்வே எண். 320 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிவாசாஆ 1 ஆவணத்தில் எனது சர்வே எண். 320 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிலத்தின் சர்வே எண். 320 என்பதை நான் தவறுதலாக 321 என்று கூறிவிட்டேன். எனது நிலத்திற்கு பட்டா பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிலத்திற்கான பட்டாவை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இந்த வழக்கின் பிராதில் வாதிகள் தாக்கல் செய்தள்ள அசல் வழக்கு எண். 184/2017 பற்றிய விபரம் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) பிவாசாஆ 1 ஆவணமானது 3ம் பிரதிவாதி முருகன் என்பவரிடம் நான் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் பெற்றுள்ளதால் அவருக்கு ஆதரவாக ஸ்தலத்தில் உள்ள விபரங்களை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை 1ம் வாதியின் தாயார் பேச்சியம்மாள், ராமசாமிபிள்ளை வகையறாவினரிடமிருந்து கிரையம் பெற்றதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பேச்சியம்மாள் அவரது மக்களான குருசாமி, ஆறுமுகம், முருகேசன்

ஆகியோர்களுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்ததில் எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. குருசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை செல்லமணிக்கு விற்பனை செய்து செல்லமணியிடமிருந்து 1ம் வாதி கிரையம் பெற்றுள்ள சொத்தைப்பொறுத்து எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் 1ம் வாதி கிரையம் பெற்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது.

5) ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1ம் வாதி கிரையம் பெற்றதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் அந்த கிரையம் பற்றியும் எனக்கு தெரியாது. 1990ம் வருடம் பேச்சியம்மாள் கிரையம் பெற்ற மொத்த சொத்தையும் தானசெட்டில்மெண்ட ஆவணத்தின் அடிப்படையிலும் 1ம் வாதியின் மேற்கண்ட இரண்டு கிரைய ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிகள் அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2008ம் வருடம் பிவாசாஆ 1 ஆவணத்தின் படி நான் எனது சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக வழக்குரைச்சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்துக்களின் அமைப்பு பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போதும் எனது நிலம் காலியிடமாக தான் உள்ளது என்றால் சரிதான். தோராய வரைபடத்தில் DEFGD என்ற பகுதி வாதிகளின் நிலத்திற்கும், 3ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே உள்ள பகுதி என்றால் சரிதான். DEFGD பகுதிக்கும், எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

6) பிவாசாஆ 1 ஆவணத்தின் முன் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்வசம் உள்ளது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வழக்குரையில் வாதிகளின் நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாக மட்டுமே வாதிகள் கூறியுள்ளார்கள் என்றும், நான் ஆக்கிரமிப்பு உள்ளதாக வாதிகள் எந்த விபரமும் கூறவில்லை என்றும் ஆனால் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் வாதிகள் நிலத்தை நான் ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளார்கள் என்று தவறான விபரத்துடன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தான் பிராதில்

கூறியுள்ளார்கள்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

(ஓ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.